Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 204/2024 PW-1**

Name : நித்தியா (எ) ரேகா
Father / Husband name : மகேந்திரன்
Village : நொளம்பூர்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.09.2025

A2 to A6 present. A1, A7 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் வீட்டுக்குடுத்தினம் தான். சாட்சி பிரகாஷ் என்பவர் எனது அண்ணன், அவர் தற்போது இறந்துவிட்டார். சாட்சி விமலா எனது அம்மா. சாட்சி கற்பகம் எனது பாட்டி. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு எனது அம்மா நொளம்பூரிலிருக்கும் ஊரில் ஓட்டு இருப்பதால் நான் கடந்த 04.04.2021 அன்று எனது அம்மாவீட்டிற்கு சென்றேன். 05.04.2021 அன்று இரவு 10.00 மணிக்கு நான் எனது அம்மா வீட்டிலிருந்தபோது லட்டு (எ) கணேசன், ஆதிநாராயணன், குமார், விஜயகுமார், பிரபு, சதீஷ், சந்தோஷ் ஆகியோர்கள் கத்தி, இரும்பு பைப், சவுக்குதடி எடுத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்து கதவை தட்டினார்கள். எனது அண்ணன் பிரகாஷ் வெளியில் சென்றவுடன் அவரை எதிரிகள் அனைவரும் தேவிடியா பையா, பாடு வெளியில் வாடா என்று நீ சூரியனுக்கு ஓட்டுப்போடக்கூடாது, இரட்டை இலை சின்னத்துக்கு தான் ஓட்டுப்போட வேண்டும் இல்லையென்றால் உன் தலையை வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார்கள். தடுக்கச்சென்ற என்னை பறையனக்கட்டிக்கிட்ட தேவிடியா நீ வந்து பேசக்கூடாது என்றும், அங்கிருந்த பிளாஸ்டிக் சேரை எடுத்து எனது மார்பு, தலையில் ஆதிநாராயணன், லட்டு என்ற கணேசனும் அடித்தார்கள். அந்த சமயம் 5 மாத கைக்குழந்தையை கையில் வைத்திருந்தபோது என்னை அடித்து

கீழே தள்ளியதை பார்த்த எனது அம்மா வந்து அவரை தடுத்தபோது எனது அம்மா, பாட்டியையும் எதிரிகள் 7 பேரும் அவர்களையும் பிடித்து கீழே தள்ளி நீ எல்லாம் இந்த ஊருக்கு வரக்கூடாது பறையனுக்கு பெத்துவச்சிருக்க என்று தரைகுறைவாக பேசினார்கள். உங்களை கொலை செய்தால் யாரும் சாட்சி சொல்லமாட்டார்கள், நாங்கள் 1000 குடும்பம் உள்ளதால் எங்களுக்கு எதிராக யாரும் சாட்சியம் சொல்லமாட்டார்கள் என்று லட்டு என்கிற கணேசன் சொன்னார். எதிரிகள் அனைவரும் எனது வீட்டின் உள்ளே நுழைந்து எனது அண்ணனை துரத்தினார்கள். எனது அண்ணன் தோட்டத்திற்கு வெளியில் சென்றவரை அனைவரும் துரத்தினார்கள். எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு அடிக்கடி நெஞ்சு மற்றும் தலையில் வலியிருந்து வருகிறது. அடிப்பட்ட நான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது அம்மாவிற்கு இடுப்பிலும், எனது பாட்டிக்கு நெஞ்சுபகுதியிலும் அடிப்பட்டது. அம்மாவும் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார். பின்னர் ஒலக்கூர் காவல் நிலையத்திற்கு சென்று சம்பவம் குறித்து நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். **அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர், பிறந்த வளர்ந்தது நொளம்பூர் என்றால் சரிதான். தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் நொளம்பூர். எனது புகாரில் திண்டிவனத்திலிருந்து சொந்த ஊரான நொளம்பூருக்கு சென்றதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல, நான் திண்டிவனத்தில் தான் வசித்திருந்தேன். நான் திண்டிவனத்தில் எத்தனை வருடமாக இருக்கிறேன் என்றால் 8 வருடமாக இருக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம். சிஏ

படித்துள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச்சென்றபோது யார் யார் சென்றோம் என்றால் நானும் எனது கணவரும் சென்றோம். அந்த புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல எனது கணவர் எழுதினார். அதிலிருக்கும் வாசகம் அனைத்து நான் சொல்ல எழுதி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் புகாரில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2. வழக்கின் சாட்சி பிரகாஷ் எனது அண்ணன் என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 05.04.2021 அன்று இரவு 10 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்தன்று ஏற்பட்டக்காயத்திற்கு மறுநாள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான், போலிசார் சொல்லிதான் போகவில்லை. போலிசார் சொல்லி போகவில்லை என்பதை புகாரில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எத்தனை கி.மீ இருக்கும் என்றால் சுமார் 10 கிமீ இருக்கும், சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். சம்பவம் நடந்த சமயத்தில் எலக்சன் வேலை நடந்தது என்றால் சரிதான். என்ன எலக்சன் என்றால் முதலமைச்சர் எலக்சன் நடந்தது. எந்த தேதியில் நடந்தது என்றால் 6 ம் தேதி. சம்பவநேரம் இரவு நேரம் என்பதால் வெளிச்சம் குறைவாக இருக்கும் என்றால் சரிதான். ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியவாய்ப்பில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் வேறு அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது கைக்குழந்தையையுடன் இருக்கும்போது தாக்கியிருந்தால் குழந்தைக்கும் அடிப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல, நான் எனது குழந்தையை அனைத்து பிடித்திருந்தேன், அதனால் குழந்தைக்கு அடிப்படவில்லை.

3. அம்மாவும், பாட்டியும் மருத்துவ சிகிச்சை எடுக்கவில்லை, அதனால் மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அதில் எனக்கு பலத்தக்காயம் ஏற்பட்டது. என்னை தாக்கப்பயன்படுத்திய பொருட்களை

போலிசார் கைப்பற்றினார்களா என்றால் எதிரிகள் தடயப்பொருட்களை எடுத்துச்சென்றுவிட்டார்கள், சிபிஐ போலிசார் வந்து சம்பவயிடத்தை பார்த்தார்கள். எதிரிகள் ஆயுதம் எடுத்துவந்தபோது எங்கள் வீடு பூட்டியிருந்தது, எதிரிகள் தட்டினார்கள் என்றால் சரிதான். கதவை திறந்து பார்த்தால் தான் எதிரிகள் என்ன எடுத்துவந்தார்கள் என்பது தெரியும் என்றால் சரிதான், கதவை தட்டியால் நாங்கள் திறந்துபார்த்தோம். புகாரில் எதிரிகள் ஆயுதங்களால் கதவை தட்டியதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் கதவை திறந்து பார்த்தேன். எதிரிகள் என்னை திட்டவில்லை, தாக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எனக்கு ஏற்பட்ட காயங்களை தான் மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நகல்கள் எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதனை படித்தேனா என்றால் படித்துபார்த்தேன். அந்த வழக்கு கோப்பில் பிரிவு மாற்றம் செய்துள்ளதை படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். நான் கொடுத்த புகார் மிகைப்படுத்தி கூறியுள்ளதால் சில எதிரிகளை வழக்கிலிருந்து நீக்கியுள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். எனது அண்ணன் பிரகாஷ் என்ன படித்துள்ளார் என்றால் எம்,எஸ்சி, பிஎட். படிதத்துள்ளார். அவர் என்ன வேலை செய்தார் என்றால் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை செய்தார். தேர்தல் சமயம் என்பதால் அரசியல் கட்சியிலும் வேலை செய்தார் என்றால் சரிதான்.

4. எலக்சன் பூத்தில் மிசன் இறக்கும்போது அனைத்து கட்சியின் ஏஜென்டுகள் செல்வார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் வழியாக பூத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான். எதிரிகள் பூத்திக்கு செல்லும்போது எதிரிகளும் எனது அண்ணனும் வெவ்வேறு கட்சி என்பதால் எனது அண்ணன் தான் எதிரிகளியிடம் சண்டை போட்டார் என்றால் சரியல்ல. இந்த பிரச்சனைக்கு காரணம் தேர்தல் என்று புகாரில் சொன்னேன் என்றால் இல்லை. எனது அண்ணன் வீன்பிரச்சனை செய்யும்போது நானும் எனது அம்மா, பாட்டி ஆகியோர்கள் தடுத்தபோது எனது அண்ணன் தள்ளி கீழேவிழுந்தோம் என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணத்தில்

எனக்கு ஏற்பட்டக்காயம் சொற்பகாயம் என்று சொல்லப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். முதல்விசாரணையில் சொன்ன கத்தி, தடி, சேர், கூடையால் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு பிரச்சனை நடந்திருந்தால் போலிசார் தடயப்பொருட்களை கைப்பற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எலக்சன் சமயத்தில் அரசியல் கட்சிக்கு ஓட்டுபோடசொல்லி வற்புறுத்தினால் தேர்தல் ஆணையம் மற்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம், நான் அவ்வாறு புகார் கொடுத்தேனா என்றால் ஒலக்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். 1000 சாட்சிகள் வந்தாலும் எதுவும் செய்யமுடியாது என்று எதிரிகள் சொன்னதை புகாரில் சொன்னேனா என்றால் இல்லை, போலிசார் விசாரணையில் சொன்னேன். எனது தலையை வெட்டிவிடுவதாக எதிரிகள் சொன்னததை புகாரில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை, ஏற்கனவே எனது அண்ணனுக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்த முன்விரோதத்தின்பேரில் யாரோ தூண்டுதலின்பேரில் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் சரியான நேரத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 7ம் தேதி கொடுத்த புகாருக்கு எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும், ஒருவாரம் கழித்து பதிவு செய்தார்கள். போலிசார் கடைசியாக என்னை எப்போது, எங்கு விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள், நேரம் நினைவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**